வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2546 /ஆ1/2022, நாள் : 25.07.2022

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - மே 2022-ல் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் - வழங்குதல் சார்ந்து.

பார்வை: சென்னை-6, மாநில திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்.ACE/118/ஆ3 /CG/ஒபக/2022, நாள்.11.07.20222.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்தின்படி பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.6-ல் " தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கென, தனியே கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும் " எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**" நான் முதல்வன் திட்டம் "** இதன் அடிப்படையில் பள்ளிக் கல்வியின் கீழ் இயங்கும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்க ஏதுவாக " நான் முதல்வன் " திட்டத்தின்கீழ் பயிற்சி புத்தகம் தயாரிக்கப்பட்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் வழங்கப்படவுள்ளது. மேலும், இணைப்பில் காணும் கடிதத்தில் மாநில அளவிலான பயிற்சிகள் DIET விரிவுரையாளர்களுக்கும் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இணைப்பில் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செயல்படுமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள், பேராசிரியர், மாவட்டக்கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டாரவள மைய மேற்பார்வையாளர்கள், அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு-
(பார்வைக் கடித நகல் 6 பக்கங்கள்)

பெறுநர் :
மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர், வட்டாரக் கல்வி அலுவலர்கள்(வே.மா.ஒன்றியங்கள்), பேராசிரியர்கள், மா.க.(ம) ஆ.ப.நிறுவனம், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்ட -ஒருங்கிணைப்பாளர்கள், வே.மா. வட்டார வள மைய மேற்பார்கையாளர்கள்,(வே.மா. ஒன்றியங்கள்) வே.மா. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் அனைத்து அரசு உயர்/மேல்நிலைப பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வே.மா.

நகல்-1. சென்னை-6, மாநில திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

நகல்-2. வேலூர்-6, மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு
(தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது).

//ப.த.//

G-mail
22/07/22
11.19 AM
2546

மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி ரின் செயல்முறைகள் செயல்முறைகள், சென்னை-600006

ந.க.எண்: ACE/118 /ஆ3/CG/ஒபக/2022, நாள்: 11 .07.2022

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - மே 2022ல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வெழுதிய மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் -வழங்குதல் சார்ந்து.

பார்வை : 1. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்:6 /2021-2022

2. அரசாணை நிலை எண்:5, பள்ளிக் கல்வித் துறை (ப.க.5(1)) துறை நாள்: 21.02.2022.

22 JUL 2022

.........

பார்வை-2ல் காணும் அரசாணையில், பள்ளிக் கல்வி துறை மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்:6ல் "தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் ஆலோசனை மையம் உருவக்கப்படும். அதற்கென, தனியே கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர்வகுப்புகள் நடத்தப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>"நான் முதல்வன்" திட்டம்</u>

இதன் அடிப்படையில் பள்ளிக் கல்வியின் கீழ் இயங்கும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்க ஏதுவாக "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ்' பயிற்சி புத்தகம் தயாரிக்கப்பட்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சார்பில் கீழ்காணுமாறு மாநில அளவிலான பயிற்சிகள் DIET விரிவுரையாளர்களுக்கும் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பங்கேற்பாளர்கள் | பயிற்சி நாட்கள் |
|---|---|---|
| 1 | <u>முதன்மை கருத்தாளர்கள் பயிற்சி</u><br>1. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி முதுகலை விரிவுரையாளர்கள் / விரிவுரையாளர்கள் -38<br>2. முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள்-38 | 31.03.2022<br>மற்றும்<br>01.04.2022 |
| 2 | 1.மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி முதுகலை விரிவுரையாளர்கள்/ விரிவுரையாளர்கள் -76<br>2. முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள்-76 | 17.06.2022<br>மற்றும்<br>18.06.2022 |

மேற்காண் முதன்மைக் கருத்தாளர்கள் வாயிலாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும், ஒரு முதுகலை பட்டதாரி ஆசிரியருக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பயிற்சி புத்தகங்களில் முழுமையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி -2022-23**

இதனைத் தொடர்ந்து, இவ்வாண்டு முதல் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, தமிழகத்தில் 2021-22ஆம் கல்வியாண்டில், மே 2022ல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொது தேர்வு எழுதிய மாணவர்கள் மற்றும் கடந்தாண்டுகளில் தேர்வெழுதி தோல்வியுற்று மீண்டும் தேர்வெழுதிய மாணவர்கள் மாற்று சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் பெற வேண்டி, பள்ளிக்கு வரும்போது அவர்களுக்கு உயர்கல்வி பெறுதல் சார்ந்த வழிகாட்டுதல்கள், மேற்காண் பயிற்சி பெற்ற, அப்பள்ளியில் பணியுரியும் ஆசிரியர்களால் பின்வரும் வழிமுறைகளை பின்பற்றி தவறாமல் வழங்கப் பட வேண்டும்.

- அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளியில் பணிபுரியும் முதன்மை பயிற்சியாளர்கள் ஆசிரியருக்கு, மேற்கூறப்பட்ட மாணவர்களுக்கு தேவைப்படும் **உயர்கல்வி** வழிகாட்டுதல்களை வழங்க நேரம் ஒதுக்கீடு செய்து மற்றும் உரிய அனுமதிகளை வழங்குதல் வேண்டும்.

- மேலும் மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல்களை வழங்க ஏதுவாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஹைடெக் லேப்களை பயன்படுத்த அனுமதி வழங்குதல் வேண்டும்.
- தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் உள்ள ஹைடெக்லேப்களை மாணவர்கள் கல்லூரிகளுக்கான விண்ணப்ப படிவங்களை தரவிறக்கம் செய்யவும், விண்ணப்பம் அனுப்பவும் பயன்படுத்த ஏதுவாக தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
- மாணவர்கள் விடுமுறை நாட்களிலும், உயர்கல்வி பற்றிய தகவல்களை சேகரிக்கவும், கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கவும் ஏதுவாக ஹைடெக் லேப்களை பயன்படுத்த தலைமையாசிரியர் அனுமதித்தல் வேண்டும்.
- தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் உயர்கல்விக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் விண்ணப்பித்துள்ள படிப்பு உள்ளிட்ட விவரங்களை கீழ்காணும் படிவத்தில் பள்ளிகளில் பராமரித்தல் வேண்டும்.

| வ. எண் | மாணவ/ மாணவியின் பெயர் | பயின்ற வகுப்பு 2021-22 | EMIS No. | விண்ணப்பித்துள்ள உயர்கல்வி | சேர்ந்துள்ள உயர்கல்வி 2022-23 | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

- உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பயிற்சி புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள செயல்பாடுகளை பின்பற்றி மாணவர்களுக்கு தேவையான உயர்கல்வி சார்ந்த விவரங்களை வழங்குதல் வேண்டும். மேலும், மாணவர்களுக்கு விண்ணப்பித்தலிலும் உடனிருந்து உதவ வேண்டும்.
- அவ்வாசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்களுடன் உரையாடி மாணவர்களுக்கேற்ற உயர்கல்வி வாய்ப்புகளை அவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தல் வேண்டும்.
- தேர்வெழுதாத மாணவர்களை பள்ளிக்கு வரவழைத்து, மறு தேர்வு வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தவும், தொடர்ச்சியாக உயர்கல்வி நோக்கி செல்ல இருக்கும் வாய்ப்புகளை குறித்து வழிகாட்டவும் அறிவுறுத்தப்படுகிறது.

<u>கண்காணிப்பு</u>

<u>(அ) ஒன்றிய அளவில்</u>

- அனைத்து ஒன்றியங்களிலும் பணியாற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை பார்வையிடும் போது மேற்கூறப்பட்டுள்ள உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பயிற்சி புத்தகத்தில் உள்ளவாறு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
- மேலும் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கு ஏதுவாக பயிற்சி புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள செயல்பாடுகளை அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாட இடைவேளையின் போது மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.
- தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் உயர்கல்விக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் விண்ணப்பித்துள்ள படிப்பு உள்ளிட்ட விவரங்களை உரிய படிவத்தில் பராமரிக்கிறனரா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

<u>(ஆ) மாவட்ட அளவில்</u>

- மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டார கல்வி அலுவலர்கள் தங்களின் பள்ளிப் பார்வையின் போது உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதனை ஆய்வு செய்தல் வேண்டும்.
- தலைமையாசிரியர்களுக்கான மீளாய்வு கூட்டங்களில் இப்பொருள் சார்ந்து தவறாது ஆய்வு செய்திடல் வேண்டும்.

எனவே, அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, இச்செயல்முறையில் கூறியுள்ளவாறு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பின்பற்ற நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மாநில திட்ட இயக்குநருக்காக

**பெறுநர்**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்

**நகல்**

**(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. மாவட்ட கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்
2. வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்து ஒன்றியங்கள்
3. பேராசிரியர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்
4. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
5. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், அனைத்து ஒன்றியங்கள்
6. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்
7. அனைத்து தலைமை ஆசிரியர்கள் (அரசு மேல்நிலைப் பள்ளிகள்)